Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 18 (31-3-94) வியாழக்கிழமை ஓசை 41

## 1993 க. பொ. த. உ. பரீட்சை; மொத்தப் புள்ளிகள் அனுப்பப்பட்டன

கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு அவரவர் பெற்ற மொத்தப் புள்ளிகள் பற்றிய விபரம் நேற்று தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. பாடசாலை விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அவரவர் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு நகர எல்லைக்குள் அமைந்த பாடசாலைகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணைகளை இன்று காலை (6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி விஜேதுங்காவின் தலையீட்டால் சபாநாயகரின் யாழ். வருகை ஒத்திவைப்பு

## சமாதான முயற்சிகள் தடைப்பட்டன

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தின் சபாநாயகர் எம். எச். முகமட் நாளை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலையீட்டின் காரணமாகவே இவ்விஜயம் திடீரென ஒத்திவைக்கப்பட்டதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, சபாநாயகர் முகமட்டின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டமையால் சமாதான முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பிரான்சுக்கு உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு விட்டு நாடு திரும்பிய சபாநாயகர் முகமட் பாதுகாப்பு மற்றும் பிரயாண ஏற்பாட்டு கஷ்டங்களினால் விஜயத்தை பின் போடும்படி ஜனாதிபதி தமக்கு ஆலோசனை கூறியதாக சிறிலங்கா வானொலிக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அனுமதியுடன் விடுதலைப்புலிகளுடன் தான் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் தம்மை வரவேற்க விடுதலைப்புலிகள் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். விடுதலைப்புலிகள் தலைவர் பிரபா (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி ஏன் கூறினார் எனத் தெரியாது

### காரணம் ஏற்புடையதல்ல என்கிறார் சபாநாயகர்

"எனது யாழ். விஜயத்தை ஜனாதிபதி ஒத்திபோடுமாறு ஏன் கூறினார் என்பது ... நாயகர் எம். எச். முகமட் நேற்று பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்... கேள்வி: ஜனாதிபதி நாட்டின் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்...

## மீனவர் நிவாரணம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாதிப்படைந்த மீனவர்களுக்கான நிவாரணத்தை வழங்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதிப்படைந்த மீனவர்களுக்கான நிவாரணம் தொடர்ந்து வழங்குவதற்கு புனர்வாழ்வு திணைக்களம் முடிவு செய்திருந்தமை நீங்கள் அறிந்ததே.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஏற்கனவே ஜனவரி மாத நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய பெப்ரவரி மாதத்திற்கான நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அரசாங்கம் அறிவித்த கடல் வலைத் தடைச் சட்ட நீக்கம் அமுல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இதனை அடுத்தே மீனவர் நிவாரணத்தை தொடர்ந்து வழங்குவதற்கு புனர் வாழ்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (தி) பா)

## ஏப்ரல் முதலாம் திகதியில் மாணவரின் குழப்பம் பற்றி அதிபர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

சென்ற வருடம் ஏப்ரல் முதலாம் திகதி மாணவர்கள் குழப்பச் செய்கைகளில் ஈடுபட்டதாக பாடசாலை அதிபர்கள் சார்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவத் தளபதிக்கு சேவை நீடிப்பு கிடைக்காது

(கொழும்பு)

தற்போதைய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் சேவைக்காலம் விரைவில் முடிவடையவுள்ளது. இவருக்கு சேவை நீடிப்பு ஏதும் வழங்கப்படாமலேயே ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரைத் தொடர்ந்து புதிய இராணுவத் தளபதியாக தற்போதைய அதிகாரிகள் நிலைத் தலைவராக உள்ள மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

## முட்டாள் தினம் குறித்து காவல்துறையின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை ஏப்ரல் முட்டாள் தினம் எனக் கூறிக்கொண்டு வர்ணங்கள், திரவக் கலவைகள் தெளித்தல்போன்ற ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் முட்டாள் தினம் எனக் கூறிக்கொண்டு பாடசாலை மாணவ மாணவிகள் உள்ளடங்கலாக இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனையோர் மீது வர்ணங்கள் வீசுதல், (6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மூடப்பட்டிருக்கும்

நாளை அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களும், மோட்டார் வாகனப் பதிவுச் செயலகமும் திறக்கப்படமாட்டாது என்பதனைப் பொதுமக்களின் கவனத்திற்குப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

(யாழ்ப்பாணம்)

சென்ற வருடம் ஏப்ரல் முதலாம் திகதி மாணவர்கள் குழப்பச் செய்கைகளில் ஈடுபட்டதாக பாடசாலை அதிபர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளாக 'ஏப்ரல் பூல்' தினத்தினை மாணவர்கள் தங்கள் மனப்போக்கிற்கு ஏற்றவாறு அனுஷ்டித்தனர். இதனால் மாணவர்களிடையே குழு மோதலும் ஏற்பட்டது. இளைத்த மாணவர் பலவாறு இம்சிக்கப்பட்டும் உள்ளனர். அதேவேளை, மாணவிகள் பலவாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர். நிறம்கலந்த நீர் அல்லது நிறமை கொண்டு மாணவிகள் உடை அசிங்கப்படுத்தப்பட்டன. நாளை 'ஏப்ரல் பூல்' தினத்தன்று குழப்பமான செயல்களில் சில மாணவர்கள் ஈடுபடலாம் என்று பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். இவ்வகையான செயல்கள் வெளியில் நடப்பது தவிர்க்கப்படவேண்டும் என்றும் அதிபர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

## ஒரு பெண்ணிற்கு இரு இருதயங்கள்

(கொழும்பு)

பிரேதப் பரிசோதனையில் ஒருவருக்கு இரண்டு இருதயம் இருப்பதை கண்டு மரண சட்டவைத்திய அதிகாரி ஆச்சரியம் அடைந்தார்.

பாணந்துறை வாலான பகுதியை சேர்ந்த மல்லிகா ஜயவர்தனா என்ற பெண் தனது வீட்டில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டபோதும், இவரின் மரணம் மர்மமாகவே இருந்தது. எனவே இரண்டாம் முறையாகவும் சட்டவைத்திய அதிகாரியால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு இரண்டாம் முறையாகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதே இரண்டு இருதயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மரண சட்ட வைத்திய அதிகாரி பாணந்துறை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தின் நீதிபதிக்கும் பாணந்துறை மூலாதார வைத்தியசாலை மருத்துவ அதிகாரிக்கும் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வலிகாமம் பகுதியில் அவ்ரோ நோட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தின் பல பாகங்களையும் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானமொன்று பல தடவை சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

நேற்று மாலை சுமார் [illegible]00 மணியளவில் வந்த அவ்ரோ விமானமொன்று சுமார் 30 நிமிடங்கள் வரை யாழ் நகர் உட்பட வலிகாமத்தின் பல பாகங்களையும் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

இதைவிட நேற்று முழு நாளும் சிறிலங்கா விமானப் படைக்குச்சொந்தமான விமானங்களின் நடமாட்டம் பலாலிக்கும் தென்பகுதிக்கும் இடையில் வழமைக்கு மாறாக அதிகரித்துக் காணப்பட்டதை அவதானிக்கமுடிந்தது.

இதேவேளை வடமராட்சி பகுதி மீது 'புக்காரா' விமானம் ஒன்று பகல் 12.05 மணியளவில் வட்டமிட்டு நோட்டமிட்டது.

(யோ), (பா)

"எனது யாழ். விஜயத்தை ஜனாதிபதி ஒத்திப்போடுமாறு ஏன் கூறினார் என்பது தெரியாது. யாழ்ப்பாணம் செல்ல முடியாததையிட்டு எனக்கு மிகவும் கவலை. நாட்டில் சமாதானம் இப்போது தேவை. பிரச்சினையை தீர்ப்பது அனைவரினதும் கடமை. அரசு இதை உணர வேண்டும்" இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகம்மது நேற்று பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

கேள்வி: நீங்கள் யாழ். சென்று விடுதலைப் புலிகளை சந்திக்க இருந்தீர்களா?

பதில்: ஆம். எல்லா ஒழுங்கையும் அவர்கள் செய்திருந்தனர்.

...டில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது எனக் கூறிவருகின்றாரே?

பதில்: அதைப்பற்றி என்னால் ஒன்றும் கூறமுடியாது. சமாதானம் பற்றியே என்னால் கருத்துக் கூறமுடியும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளில் அரசிற்கு நாட்டம் இல்லை

(கொழும்பு)

சிறிலங்கா அரசு சமாதான முயற்சிகளுக்கு நாட்டம் காட்டாமையே இந்த நடவடிக்கை காட்டுகிறது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செள. தொண்டமான் கனேடிய பிரதிநிதிகளின் தலையீட்டுடன் ஆரம்பிக்க இருந்த சமாதான முயற்சிகளுக்கும் அரசு அனுமதி வழங்கவில்லை என்பதையும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச தாம் தயாராக இருப்பதாகவும் அதற்கென தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும் என முன்னர் அறிவித்திருந்த போதும் அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதிலிருந்து பின்வாங்குவதிலிருந்து தெரியவருகிறது. வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை அரசு முறியடித்து வருகிறது. எனவே பேச்சுவார்த்தைக்கான நிலைமை பின்தள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறிவரும் ஜனாதிபதி விஜேதுங்க புலிகளை அடக்க இராணுவ பலத்தையே விரும்புகிறார் என்பதை சபாநாயகரின் யாழ். விஜயத்தை அவர் ரத்து செய்ததன் மூலம் தெரியவருவதாக பி.பி.ஸி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு ஹமில்டனே பொறுப்பு ஏற்கவேண்டும்

### உயர் அதிகாரிகள் மட்டத்தில் அபிப்பிராயம்

(கொழும்பு)

பூநகரியில் அரசபடைகளுக்கு ஏற்பட்ட தோல்விக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவே பொறுப்பேற்க வேண்டும். இதற்கு முழுப் பொறுப்பையும் பதவிவிலகிய முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன மீது சுமத்துவது தவறானதாகும் என உயர் அதிகாரிகள் மட்டத்தில் கருத்து நிலவுவதாக ராவய சிங்களப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பூநகரி தோல்விக்கு பொறுப்பேற்று தாமே முன்வந்து பதவி விலகிய முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன மீண்டும் இராணுவ சேவையில் சேர்க்கப்பட வேண்டும் என பாதுகாப்பு மற்றும் அரசியல் உயர் அதிகாரிகள் அரசை வற்புறுத்தி வருவதாகவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

பூநகரி தோல்விக்கு இராணுவத்தை மட்டும் குறைகூற முடியாது அங்கு கடற்படையினரும் தங்கியிருந்தனர். எனவே கடற்படையும் இத்தோல்விக்கு காரணம் குறிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

## 4.4 கிலோ ஹிரோயின் கடத்திய பெண் கைது

(கொழும்பு)

4.4 கிலோ ஹிரோயின் போதைப் பொருளை கடத்தி வந்த இந்தியப் பெண் ஒருவர் நேற்று நண்பகல் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் கைதானார்.

நடுத்தர வயதுப் பெண்ணான இவர் திருவனந்தபுரத்திலிருந்து இந்திய விமானத்தில் வந்தவர் எனவும் இவர் கடத்தி வந்த ஹிரோயினின் பெறுமதி இரண்டரை லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் சுங்க சோதனையின்றி வெளியேறும் பகுதியூடாக வெளியேறியபோது சுங்க உதவி அத்தியட்சகர் இவரின் பயணப்பையை சோதனையிட்டதில் அதன் அடிப்பகுதியில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## தேர்தல் வன்முறைக்கு தெற்கில் இருவர் பலி

தென் மாகாண சபை தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து இடம் பெற்ற வன்முறைகளுக்கு இருவர் பலியானதுடன் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன.

கடந்த சனிக்கிழமை மாலை வேளை காலி மாவட்டத்தில் நெலுவை பொலிஸ் பிரிவில் ஹினிதுமபட்டகந்த எனுமிடத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இளைஞரணித்தலைவரான அநுலால் (வயது 31) என்பவர் பொல்லுகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

மாத்தறை மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளரான சிறிபால கொடித்துவக்கு என்பவர் வாளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இதேவேளை அம்புறுப்பிட்டியாவில் கடையொன்றுக்கு தீவைக்கப்பட்டதால் கடையிலிருந்த பொருட்கள் அனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "விடுதலைப் புலிகள்" ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழின் 1994 பங்குனி மாத ஏடு நாளை வெளிவருகின்றது.

'விடுதலைப் புலிகள்' இதழ் தனது பத்தாவது வயதை நிறைவுசெய்யும் நினைவு இதழாக இந்த ஏடு வெளிவந்துள்ளது.

"குழம்பிய நிலையில் சிங்கள அரசு; அடுத்த நடவடிக்கை என்ன?" என்ற பிரதான தலைப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ் இதழில் "ஈழத்தமிழர் போராட்டமும், இந்தியாவின் நிலைப்பாடும்" என்ற தலைப்பில் ஆசிரியர்தலையங்கம் வரையப்பட்டுள்ளது.

மேலும், "புலிகளின் சமாதானசமிக்ஞைகளுக்கு சிங்கள அரசின் பதில் என்ன?" "தமிழ் வாக்குகளைக் கைப்பற்ற சந்திரிகா வைக்கும் கண்ணி" "பிரகாசமான எதிர்காலத்தைநோக்கி தமிழீழப்பெண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மணப்பெண் தேவை**

கூட்டுறவுச் சங்கமொன்றில் கடமையாற்றும் 36வயதுடைய அத்தம் நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 15|8 புனித செபஸ்தியார் ஒழுங்கை, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (7862)

**"தண்ணீர் ராங்"**

8×4×4 அளவுள்ள தண்ணீர் ராங் விற்பனைக்குள்ளது. "மில்க்வைற்" (சி-8947)

**வீடு வளவு விற்பனைக்கு**

171|1, வேப்படி வீதியில், ஆங்கிலத் திருக்குடும்ப மடத்துக்கு முன்புறமாக உண்டு விடுமுறை தினங்களில் சந்திக்கலாம். (7870)

**புரோயிலர் குஞ்சு விற்பனை**

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை ஒழுங்கு ஒழுங்கை, மானிப்பாய். (7840)

**டாக்டர்கள் தேவை**

M. B. B. S., R. M. P. A. M. P. டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொது ஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை. 1-4-94ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம்நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி, வில்லியம் ஹாவே இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (7815)

**நவீன மருத்துவம்**

வாத வியாதி, ஆஸ்துமா, தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, மூலரோகம், நாள்பட்ட காய்ச்சல், இருதய வியாதிகள், சிறுவர் பெரியவர்க்குரிய சகல நோய்கட்கும் நவீன எக்ஸ்ரே பரிசோதனைகளும், சிகிச்சையும் இரட்ணம் வைத்திய சாலை, 129 ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம் (7838)

# மாத்தளையில் தோட்டத்தில் புகுந்து தமிழர்மீது காடையர் தாக்குதல்

## தொ, தே. ச. கண்டனம்

(கொழும்பு)

பெருந்தோட்டங்களில் வெளியார்களும், காடையர்களும் புகுந்து தொழிலாளர்களைத் தாக்குவதும், அவர்களது உடைமைகளையும், குடியிருப்புகளையும் தீயிட்டுக் கொளுத்துவதும் பாரதூரமான செயலாகும் இத்தகைய செயல்கள் தோட்டங்களுக்குள் இடம்பெறும்போது அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தோட்ட நிர்வாகமும் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான டி. அய்யாத்துரை கூறியுள்ளார். மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மில்லவான தோட்டத்தின் மெல்டிக் டிவிஷனில் அண்மையில் வெளியார்களால் தொழிலாளர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் இச்சம்பவம் பற்றி அவர் மேலும் கூறுகையில், தோட்டப்பகுதிகளில் வெளியார் புகுந்து தொழிலாளர்களைத் தாக்குவது இன்று நேற்று ஏற்பட்ட சம்பவமல்ல. மலைநாட்டின் பல பகுதிகளில் இத்தகைய இனவாதக் கும்பல்கள் புகுந்து அடிக்கடி தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றன. அப்பகுதிகளிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளும் இத்தகைய சம்பவங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கின்றனர் என்பது கடந்தகால சம்பவங்கள் மூலம் தெரியவருவதாகும். இத்தகைய இனவாதத் தாக்குதல்களிலிருந்து தோட்டங்களுக்கு எப்போதுமே பாதுகாப்பு வழங்கப்பட்டதில்லை. தோட்ட நிர்வாகங்கள் கூட தங்கள் கடமையை மறந்து இனவாதிகளின் இச்செயலைக் கண்டிக்காமல் பொலிசாரின் பொறுப்பிலேயே விட்டுவிடுகிறது. இது பாரதூரமான செயலாகும். தோட்டங்களுக்குள் வெளியார் புகுந்து அட்டகாசம் புரிவதைத் தடுப்பதில் தோட்ட நிர்வாகம் பொறுப்பேற்பதில்லை. இதனால் தொழிலாளர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதமில்லாமலுள்ளது அரசாங்கமும் இனவாதிகளின் இச்செயலைக் கண்டிக்காமல் பாராமுகமாக இருந்து விடுவது இவர்களை மேலும் ஊக்குவிக்கும் செயலாகும் எனவும் தெரிவித்தார்.

## தொழிநுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள் 1992, 1993

1993ஆம் கல்வியாண்டிற்கு விண்ணப்பித்த தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்தாளருக்கான பரீட்சையும், 1993ஆம் கல்வியாண்டிற்கு விண்ணப்பித்த உயர் வணிகத் தகுதித்தேர்வு (பயிற்சிநெறி இல: டீ101) 3-ம் வருடம் (முன்னைய வருடம் நடக்காதது) பயிற்சிநெறிக்குரியபரீட்சையும் 1994-04-05ஆம் திகதி ஆரம்பமாகிறது என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

1994-04-04ஆம் திகதி சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர்களிடம் பரீட்சைக்குரிய அனுமதிபட்டையைத் தமது மாணவ பிரவேச அனுமதிச்சீட்டைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1994-03-30 (சி-8963)

## லொறி - மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையில் உள்ள லொறி, மோட்டார் சைக்கிள் (எம். டீ. 90) என்பன உடன் வாவிப்புக்கு தேவைப்படுகிறது.

விற்க விரும்புவோர் 12-04-94 ஆந் திகதிக்கு முன்னர் வாகனத்தின் வகை, மொடல், இலக்க வரிசை ஏனைய பூரண விபரங்களுடனும், விலை விபரங்களுடனும் பின்வரும் முகவரியில் எழுத்து மூலம் நேரில் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,

நடுவப்பணியகம்,

மானிப்பாய். (சி-8966)

## புத்தாண்டை முன்னிட்டு போட்டிகள்

வலிதெற்குப் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும், மேற்படி பிரிவில் நிரந்தரமாக வதிவோர்களுக்குமான புத்தாண்டுத் தினத்தையொட்டி பேச்சு, கவிதை, நாட்டார் பாடல்களுக்கான போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. புத்தாண்டு சம்பந்தமானவிடயங்களை கருப்பொருளாகக் கொண்டு அமையவுள்ள இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் கரபந்தாட்டம், தாச்சி, கயிறிழுத்தல், கயிறடித்தல் போன்ற விளையாட்டுகளும் புத்தாண்டையொட்டி நடாத்தப்படவுள்ளன. (09)

## ஏப்ரல் 08 முடிவுத் திகதி

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியாகும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஒளிவசதியும் இலவச சேவையும்

நல்லூர் முருகன் சனசமூக நிலையம் தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மாணவர்கள் படிப்பதற்கு வசதி செய்யும் முகமாக இரவில் ஒளிவசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மேலும் தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள வீடுகளில் இருக்கும் மலகூடக்குழிகளை கிடங்குகளிலுள்ள வெடிப்புகள் மற்றும் துவாரங்கள் என்பவற்றை இலவசமாக அடைத்துக் கொடுக்கவும் மேற்படி நிலையம் முன்வந்துள்ளது. மலேரியா ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நினைவு கூருகின்றோம்...

### 1994-03-31

1986ஆம் ஆண்டு இத்தினத்தில் மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**விமல்ராஜ்** (பொன்னுத்துரை இராஜேந்திரன் - கொம்மாந்துறை - மட்டு)

**ஸ்ரார்** (வாரித்தம்பி பொன்னம்பலம் - கல்வயல் சாவகச்சேரி யாழ்)

1987ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் எதிர்பாராத விதமாக எமது பொறி வெடியில் சிக்கியதில் எமைப் பிரிந்த

**குட்டி / மனோராஜ்** (இராசையா இராசரட்ணம் - கம்பர்மலை வல்வெட்டித்துறை)

**ரதன்** (காங்கேஸ் தினேஸ்வரன் - சாமியன் அரசடி முடக்காடு - கரவெட்டி மேற்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை வாசியான தமிழ்ப் பொதுமகன்

கோப்பாயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டப்பிராய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளரும், நாட்டுப்பற்றாளருமான செல்லையா தவலோகநாதன் (சந்திரன்) கட்டப்பிராய் கோப்பாய்)

1991ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சையின் போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய

**ஜெகன்** (சிவப்பெருமாள் புவிபராசா - புளியங்குளம், ஓமந்தை வவுனியா)

**மாதவன்** (விஜயராசா குணராசா - பூவரசங்குளம் - வவுனியா)

1992 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த

**சண்முகதாஸ்** (வடிவேல்செந்தில்நாதன் - இலுப்பையடிச்சேனை - மட்டு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8957)

# அண்ணாவிமார் கௌரவிப்பும், பரிசில் வழங்கலும்

அப்பாடா என்ன வெய்யில்...!
கொக்காகோலா இல்லாததன் அருமை.
இப்போது தான் தெரிகிறது.

**கவலையை விடுங்கள்**

**இதோ உங்கள் கவலையைப் போக்க**

# )( பெப்கோலா )(

**வந்து விட்டது**

- உலகப்புகழ் பெற்ற கோலா சுவையோடு
- பொருத்தமாக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப முறையோடு
- உரிய அளவு காற்றூட்டத்தோடு
- சௌகரியமான விலையில் ...

**பெற்றுக்கொள்ளுங்கள்**

ஏக விநியோகஸ்தர்

## வாமாஸ்

**121/2 மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ-8964)

# பரிசில் வழங்கலும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் மரபுவழி நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகங்களை மேடையேற்றும், அண்ணாவிமார்களை 1995-ல் கௌரவித்து பரிசில் வழங்கவுள்ளது. அதனோடு அன்றைய கௌரவிப்புவிழாவிலே அவர்களினால் தயாரிக்கப்பட்ட கூத்துக்களையும், இசை நாடகங்களையும் மேடையேற்றவுள்ளது;

**விதிகள் :**

1. நாட்டுக்கூத்துக்களிலோ, இசைமரபு நாடகங்களிலோ மேடையேற்றும் நடிகர்களில் 80 வீதமானோர் 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளாகவே இருக்கவேண்டும்;
2. நிகழ்வு 1 மணி 30 நிமிடத்திற்கு குறையாததாக இருக்கவேண்டும்.
3. 01-04-94 க்கும் 31-12-94 க்கும் இடைப்பட்ட காலத்தில் மேடையேற்றப்படும் கூத்துக்களும் இசை மரபு நாடகங்களும் மட்டும் அண்ணாவிமார் கௌரவிப்புக்கும், பரிசில் வழங்கலுக்கும் எடுத்துக்கொள்ளப்படும்.
4. நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகங்களின் வடிவங்களின் மூலம் சமகாலப் பிரச்சினைகளை வெளிக்கொணரும் (நிகழ்வுகளும்) கூத்துக்களும், நாடகங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

எனவே மேற்படி நிகழ்ச்சிகளை மேடையேற்றும் அண்ணாவிமார்கள், தமது நிகழ்வுகளை எமது கழகத்திற்கு அறிவிக்குமிடத்து, எமது கழகத்தின் பிரதிநிதி ஒருவர் அந்நிகழ்வின் பார்வையாளராக பங்கு கொண்டு அண்ணாவிமாரின் பெயரையும், நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகத்தின் பெயரையும் பதிவு செய்து கொள்வார்.

எனவே இம்முயற்சியில் திறமைமிக்க, வளம் கொண்ட நெறியாளர்கள், தயாரிப்பாளர்கள், அண்ணாவிமார்கள் ஈடுபட்டு எமது பாரம்பரிய [illegible]வடிவத்தை இளைஞர் மட்டத்தில் வளர்க்கும்படி அன்பாய் வேண்டுகின்றோம்

தொடர்பு முகவரி:

**செ. மெற்றாஸ்மயில்**
செயலாளர்

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்,**
365, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்,
சாவகச்சேரி.

(சி-8968)

யாழ்ப்பாணம்

# அதிகாரம் குவிக்கப்படுவதை ஆசிரியர் சங்கம் எதிர்க்கும்

## பொதுச் செயலர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அதிகாரப் பரவலாக்கம் என்ற பெயரில் அதிகாரங்கள் மாகாண மட்டத்தில் குவிக்கப்படுவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக எதிர்க்கும். இவ்வாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சேவை நீடிப்பு, இளைப்பாறலுக்கான அங்கீகாரம், கோட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள் போன்ற பல விடயங்கள் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்தது. ஆனால் இவை இப்போது மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தை எதிர்த்துப் போராட ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் சிரமம் பாராது போர்க்காலச் சூழலில் கல்விப் பணி புரிந்து வரும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் ஐம்பது சதவீத சம்பள உயர்வு அரசினால் வழங்கப்பட வேண்டும் எனவும், வடபகுதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் மிகக் கஷ்ட பாடசாலைகளாகப் பிரகடனம் செய்து கஷ்டப் பிரதேசப் படியாக மேலும் பதினைந்து வீத சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். போக்குவரத்து, தபால் வசதி, வங்கி வசதி போன்றவற்றை மையமாகக் கொண்டே பாடசாலைகள் கஷ்டப் பாடசாலை மற்றும் மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்டன. இந்த வசதிகள் தற்போது இந்தப் பகுதி எங்கும் இல்லாத நிலையில் மிகக் கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றுவதற்காக பதினைந்து வீத படி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# தாய்மையுற்ற பின் கைவிட்ட இளைஞருக்கு தண்டனை

காதலித்து தாய்மையடையச் செய்து கை விட்டமைக்காக, இணுவில் மேற்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு 1,50000 ரூபா அபராதமும், ஒரு வருடச் சிறையும் சுன்னாகம் மாவட்ட நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது. திருமணம் புரிவதாகக் கூறி தாய்மையடையச் செய்து கைவிட்ட மேற்படி இளைஞனுக்கு, பாதிக்கப்பட்ட பெண்ணை சட்டப்படி திருமணம் செய்யும்படியும், இல்லையேல், பெண்ணுக்கு இழப்பீட்டுப் பணமாக 1,00,000 ரூபாவும், பிள்ளைக்குரிய பணமாக 50,000 ரூபாவும் ஒரு வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், பிள்ளைக்கு தந்தையின் பெயர் பதிவு செய்ய, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதையும் நீதியாளர்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர். (09)

பதவி உயர்விற்கான

# பரீட்சை வினாத்தாள்கள் நேற்று முன்தினம் வந்தன

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுக்கான பரீட்சை வினாத்தாள்கள் நேற்று முன்தினம் வந்து சேர்ந்தன.

வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர், மக்கள் வங்கி உத்தியோகத்தர், சிவில்-மெ... ஆகிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்களே எடுத்து வரப்பட்டன. அடுத்தமாதம் 2ஆம் திகதி மக்கள் வங்கி, வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர் பரீட்சைகளும், மற்றைய பரீட்சை 5ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகளுக்கான அனுமதிஅட்டைகளும் வந்துள்ளன. ...

# சுதந்திரக் கட்சியின் வெற்றியை முன்னரே அறிந்திருந்தேன்

## - காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

தென்மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி பெரும்பான்மை பலம்பெறும் எனத் தாம் முன்னமே அறிந்திருந்ததாக ஐ.தே.கவில் இணைந்துள்ள காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட எம்.பியும் உப சபாநாயகருமான காமினி பொன்சேகா ஐ.தே.கவிற்கான தேர்தல் பிரசாரத்தை திறம்பட மேற்கொண்டிருக்கலாம் எனவும் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

இதேசமயம் தென்மாகாண சபைத் தேர்தல் முடிவு குறித்து கருத்துக்கூற முன்னாள் நிதி அமைச்சரும் அண்மையில் ஐ.தே.கவில் இணைந்தவருமான ரொனி டிமெல் மறுத்துவிட்டார். அவரின் எதிர்காலத் திட்டம் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, 'உலகில் எவ்வளவோ விடயம் நாம் செய்ய உள்ளது. அரசியல் எனது ஒரு பகுதி நேர ஆர்வமே என ரொனி டிமெல் பதிலளித்தார்.

# வெற்றி மகிழ்ச்சி கூட்டங்கள் தெ.மாகாணத்தில் நடக்கும்

## - அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

வெற்றியைக் கொண்டாடும் முகமாக பொது ஜன ஐக்கிய முன்னணி தென்மாகாணத்தில் வெற்றி மகிழ்ச்சிக் கூட்டங்கள் பலவற்றை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை பகுதிகளில் நடைபெறவிருக்கும் இக்கூட்டங்களுக்குத் தாம் தலைமையேற்க இருப்பதாகவும், மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலர் டி.எம். ஜயரட்ணா உட்பட பலரும் கலந்து கொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இக்கூட்டங்கள் எதிர்வரும் 8ம் 9-ம், 10-ம் திகதிகளில் நடத்தப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆயுதப்படை நிர்வாகத்தில் ஊழலுடன் திறமையின்மை

## ஐலண்ட் கருத்து

கடந்த இருபது வருடங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டு கிளர்ச்சி எதிர்ப்புப் போரிலிருந்து ஆயுதப்படைகளில் ஏதோ ஒரு கோளாறு இருக்கின்றது என்பதை சிறிலங்கா கொள்கை வகுப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் திறமையின்மையும் ஊழலும் பலகாலமாக சிறிலங்கா ஆயுதப்படையை நிர்வகிக்கின்றன இவ்வாறு ஐலண்ட்பத்திரிகையின்விசேட நிருபர் குறிப்பிட்டுள்ளார்

பதவியிலிருந்து ஓய்வு பெறவிருந்து பதவி நீடிப்புப்பெற்ற ஓர் அதிகாரி உயர் தரத்திற்கு பதவி ஏற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் சிபார்சு இல்லாமலேயே இரு உயர் அதிகாரிகள் அரசியல் வாதிகளால் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர் நாம் இந்தப்போரில் வெற்றி பெற வேண்டுமாயின் பதவி உயர்வுகள் தகுதியை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டுமேயன்றி சேவை மூப்பின் அடிப்படையில் அல்ல செயற்பாட்டிற்கான கௌரவிப்பு கிடைக்காவிடின் படை அதிகாரிகள் சரி, கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் சரி, தமது முகாம்களினுள்ளேயே முடங்கிக் கொள்வதை விரும்புவர் நாட்டிற்காக அவர் தம்மை பணயம்வைக்கத்துணியார்கள்

அடுத்ததாக பூநகரி பேரழிவுக்குக்காரணமாக இருந்த படை அதிகாரிகள் மீது இன்னமும் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இதுகுறித்து விசாரணைமன்று அமைக்கப்பட்டும் கூட இதற்குக்காரணமான அதிகாரிகள் அரசினால் தண்டிக்கப்படவில்லை ஆனால் பதிலாக அவர்கள் தமது பதவியில் கூடுதல் பொறுப்புகளுடன் தொடர்ந்து இருக்கின்றனர்.

அண்மையில் ஊழல்கள் குறித்த பலவிபரங்கள் வெளிச்சத்திற்கு வந்தன அரச ஒரு தொகுதி அதிகாரிகளை ஒரு அளவு கோலைக் கொண்டும் மற்றுமோர் தொகுதி அதிகாரிகளை வேறோர் அளவுகோலைக்கொண்டும் அளவீடு செய்வதை தவிர்க்க வேண்டும் உள்ளாடைகளைத் திருடியதும் வடபகுதிக்கு அலுமினியம் கடத்த உதவியதும் சமமான குற்றமே இவை விசாரிக்கப்பட வேண்டியவையேஎன அவர்மேலும்தனது செய்திக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# தென்மாகாணத்தில் 200 பேர் கைது

(கொழும்பு)

தென்மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 200 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைதான இவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

# 'என் கணவர் செயலினால் கௌரவத்தை இழந்தேன்'

## - பிரான்சிஸ்கோவின் மனைவி தெரிவிப்பு

(கொழும்பு)

''எனக்கு நடக்கவேண்டிய சகல விடயங்களும் நடைபெற்று முடிந்துவிட்டது.'' ''எனக்குதற்போது நிலையானது எனது பிள்ளைகள் மட்டுமே'' இவ்வாறு முன்னாள் தென்மாகாண சபை உறுப்பினர் விமால் பிரான்சிஸ்கோவின் மனைவி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; 'என் கணவர் மூலமாக எனது கௌரவம் சகலவற்றையும் இழந்துவிட்டேன் அதுமட்டுமல்லாது பிள்ளைகளின் கௌரவமும் என்கணவரால் பறிபோய்விட்டது' என்றார்.

இவரது கணவரான முன்னாள் தென் மாகாணசபை உறுப்பினர் ஆளும் கட்சியினரால் கடத்தப்பட்டு பின் ஆளும்கட்சிக்கு சார்பாக பத்திரிகைகள் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கு வழங்கிய பேட்டியினாலேயே இவரது மனைவி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரும் பொலிசாரும் இணைந்து அடாவடித்தனம்

(கொழும்பு)

ஆளும்கட்சி அமைச்சர்களும், மதுபோதையில் கடமையில் இருக்கும் பொலிசாரும் தென்மாகாண சபை பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்வீடுகளுக்குச்சென்று அவர்களைத் துன்புறுத்திவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவங்கள் தொடராமல் பொலிஸ்மா அதிபரால் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் தாமே தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிடும் என பொது மக்கள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இன்றைய நிகழ்வுகள்

(தொல்புரம்)

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று முற்பகல் வேளை சங்காபிஷேகமும், மணவாளக் கோல முகூர்த்தமும் நடைபெறவுள்ளது. அபிஷேகத்தினைத் தொடர்ந்து பூசை ஆராதனை வழிபாட்டுடன் சுவாமி வீதி உலா வருதலும் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது (41)

ஃ ஃ

மீசாலை வடக்கு நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்த உற்சவம் இன்று நடைபெறுகிறது. இதில் ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (25)

ஃ ஃ

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடத்தும் தமிழ் நாட்டின் நாடகவரலாறு பற்றிய கல்வியியற் கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை முதல் மாலை வரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் 96 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அன்னாரின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி ...

அமரர் மூதறிஞர் க.சி. குலரத்தினம் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்று பிற்பகல் 4 30 மணியளவில் பருத்தித்துறை வீதியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் இலக்கிய வட்டத் தலைவர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் க. சொக்கலிங்கம் (சொக்கன்) கலாநிதி க. குணராசா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

ஃ ஃ

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசசபை சங்கானை உப அலுவலகத்தின் பொது நூலக வாசகர் வட்டத்தினால் அறிவியல் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணியளவில் சங்கானை பொது நூலக மண்டபத்தில் ''நோய்களும் தடுப்பு முறைகளும்'' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள மேற்படி அறிவியல் அரங்கில் சுகாதார கல்வி அதிகாரிகள் திரு. கே. வைத்தீஸ்வரன், திரு. ஆர் இராசேந்திரம் ஆகியோரினால் விரிவுரைகள் நடாத்தப்படவுள்ளது.

ஃ ஃ

# இனப்பிரச்சினைக்கு உறுதியானதீர்வு தேட வேண்டியது அவசிய பணி

## - கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்

(கொழும்பு)

உத்தியோகத்தர், சிவில்-மெக்கானிக்-படவரைஞர்

அனுமதிஅட்டைகளுமீவந்துள்ளன. (யோ)

விஞ்ஞான இடைநிலை ஆசிரியர்

## நிரந்தர நியமனம்; சுற்றறிக்கை வந்தது

(வடமராட்சி)

விஞ்ஞான இடைமாணிஆசிரியராக நியமனம் பெற்ற பட்டப் பரீட்சைக்கு சித்தி பெறாத ஆசிரியர்களைசேவையில் நிரந்தரமாக்குதல், சம்பளப்படியில் அமர்த்துதல் பற்றிய சுற்றறிக்கை ஒன்று யாழ் கோட்ட கல்வி அலுவலகங்களுக்கு வந்துள்ளது.

இச்சுற்றறிக்கையின் படி 1981 யூலை மாதம் 10ஆம் திகதிய வர்த்தமானியின் அறிவித்தலின்படி விஞ்ஞான இடைமாணி ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களில் இதுவரை பட்டப் பரீட்சையில் சித்தியடையாதோர் பற்றிய விபரங்களை கோட்டக் கல்வி அலுவலகம் மூலம்இலங்கை கல்விச்சேவை சபையின் செயலாளர் திரு. ஏ. எஸ். வீரரத்ன கேட்டுள்ளார்.

இது பற்றிய மேலதிக தகவல்கள் இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (யோ)

## முல்லை மாவட்டத்தில் கல்வி நிர்வாகம் சீர்குலைவு

### மகாசிவம் கவலை

(புதுக்குடியிருப்பு)

கல்வி நிர்வாகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சீர்குலைந்து போயிருப்பதாகவும், இதனால் தாம் மிகவும் கவலை அடைவதாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளைக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

அதிகாரப் பரவலாக்கம் சீராகச் செய்யப்படவுமில்லை மாவட்டப் பணிமனையில் அதிகாரத் துஷ்பிரயோகம், நிதி மோசடி போன்ற ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த மாவட்ட நிலை உயர் அதிகாரிகள் கல்விஅபிவிருத்தியில் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக தங்கள் தனிப்பட்ட பொருளாதார வளர்ச்சியிலேயே அக்கறை காட்டுகின்றனர். இவை மாவட்டத்தின் கல்வி விருத்திக்கு இவர்கள் செய்யும் பெருந் துரோகமாகும். இந்நிலையில் கல்விப் பணிப்பாளர்களை அல்லது பிரதிக்கல்விப் பணிப்பாளர்களை அல்லது உதவிக் கல்விப் பணிப்பாளர்களை வழிகாட்டுவார்கள் என நம்பியிருக்காது, மாணவர்களின் நலன்கருதி ஆசிரியர்கள் தம்மாலான சேவைகளையாற்ற முன்வர வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் முல்லை மாவட்டச் செயலாளர் ம. அன்ரன் ஜெகநாதன், சங்கத்தின் துணை நிதிச் செயலாளர் இரா. மதியழகன் ஆகியோரும் உரையாற்றினர்.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்

(கொழும்பு)

இன்று இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வை தேட வேண்டியது அவசியமான பணி என கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர்ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

அடிமை யுகத்திலிருந்து கூடியும் குறைந்தும் இன்று வரை இனப்பிரச்சினை தொடர்ந்து வருவதை பலர் மறந்துவிட்டனர்- பௌத்த சிங்கள அரசை கட்டியெழுப்புவதாக பெரும் போலித் தேசாபிமானிகள் செய்தது தமிழ் மக்களை இந்நாட்டில் மூலைக்குள் ஒதுங்கச் செய்ததுதான் இதனால் இது ஒரு பாரிய சிக்கலாக மாறியிருப்பதை போலித் தேசாபிமானிகளுக்கு தெரியாதிருக்க முடியாது

இன்று தேவை குரோதத்தை வளர்ப்பதல்ல. நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வை தேடுவதேயாகும் எனவும் பேராசிரியர் தேவசிறி மேலும்தெரிவித்தார்.

## ராணுவ வெடிகுண்டு ஆலோசகர் மர்மக்கொலை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ வெடிகுண்டு ஆலோசகர் பல்கேகல புகையிரத நிலையம் அருகே சடலமாக மீட்கப்பட்டார்

இராணுவ வெடிகுண்டுகள் தயாரிப்பு முகாமில் வெடிகுண்டுத் தயாரிப்பாளராக கடமையாற்றிய இவர் அங்கு நடைபெற்ற வெடிவிபத்தில் சிக்கி தனது இருகைகளையும் கைமுட்டுக்குக் கீழ இழந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இவருக்கு வெடிகுண்டு ஆலோசகர்பதவி வழங்கப்பட்டதாகவும் இவர் விடுமுறையில்தனது வீட்டுக்குச் சென்றிருந்தபோதே மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

## கற்பிட்டிக்கு மீளக்குடியேற சென்றவர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கற்பிட்டி, பத்தலங்குவா, பல்லியவத்த தீவு பகுதியில் அச்சுறுத்தல் காரணமாக வெளியேறிய குடும்பங்களை மீளக் குடியமர்த்த எடுத்த நடவடிக்கையின் போது பலத்த மோதல்கள் நடைபெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் ''லங்காதீப'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

மேற்படி தீவுப் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களை தொடர்ந்து பாதுகாப்பு கருதி சுமார் ஐயாயிரம் பேர் வேறிடங்களில் தஞ்சம் புகுந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தஞ்சம் புகுந்தவர்களை மீண்டும் அவர்கள் குடியிருந்த பகுதிக்கு பாதுகாப்புடன் கொண்டுசெல்லும்போது மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவைக்கால பயிற்சி ஆலோசகர் விண்ணப்பங்கள் கோரல்

(வடமராட்சி)

சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் கோரப்பட்ட சுற்று நிருபம் ஒன்று சகல கல்விக் கோட்டங்களுக்கும் கிடைத்துள்ளன.

சகல பாடசாலைகளுக்குமான சேவைக்கால ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

1991ஆம் ஆண்டு பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட சேவைக்கால ஆலோசகர் தவிர ஏனைய சேவைக்கால ஆலோசகர்களும் ஆசிரியர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்றப்பட்ட ஆசிரியர் பத்து வருட சேவை உடையவராகவும் பட்டதாரி ஆசிரியர் கல்வி டிப்ளோமாவுடன் ஐந்து வருட சேவை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை இன்று பிற்பகல் 3-00 மணிக்கு சுண்டிக்குளி புனிதர் யோவான் ஸ்நானகன் தேவாலயத்தில் நடைபெறும்.

ஃ ஃ

சோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு

22 - 10 - 1969

வீரச்சாவு

01 - 03 - 1994

### லெப். மயூரன்

(சண்முகராசா செந்தில்ராஜ்)

(கரம்பொன்)

கல்வி புகட்டி வாழவைக்கக் கனவு கண்டோம்
இந்த மண்ணின் அவலம் கண்டு
உயர் கல்வியை இடை நிறுத்தி
மண்மீட்புப் போரில் உனை இணைத்தோம்
இளம்பராயம் எங்களின் மடியில் இருந்தாய்
இருபது வயதினில் இயக்கமானாய்
ஐந்து வருடங்களாக இந்த மண்ணுக்கான
உன்னுடைய உழைப்பை அறியாதிருந்தோம்
நீ வீரச்சாவடைந்த போது
எத்தனை நண்பர் வந்து சொன்னார் உன்
வீரச்சாதனைகளை
உன் புகழ் கேட்டு உளம் நெகிழ்கின்றோம்
நெஞ்சுருகின்றோம் - வணங்குகின்றோம்

63, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
அரியாலை.

குடும்பத்தினர்

(7890)

# எல்லைப்புற மாநிலங்களில் தீவிரவாதிகள் நடமாட்டம்

**- முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு**


(சென்னை)

தமிழ்நாடு உட்பட நாட்டின் எல்லைப்புற மாநிலங்களில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இன்னமும் இருப்பதாக இந்திய அரசின் முன்னாள் உள்துறை அமைச்சர் சுபோத் காந்த் சகாய் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பாகிஸ்தான் செய்து வரும் பிரசாரத்தை தனிக் கவனத்துடன் முறியடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தியாகராசா சிவயோகமலர் அவர்களின் செல்வப் புதல்வன்

### ரிசாந்

(சைவ சன்மார்க்க வித்திய சாலை ஏழாலை ஆண்டு 1 மாணவன் அம்பத்தை அளவெட்டி)

மலர்வு 17-08-1988 — உதிர்வு 01-03-1994

முப்பத்தொருநாள் சென்றதடா
முப்பத்தொரு நாளும் உன் புதைகுழியில்
அப்பா அன்புடன் பாலூர்த்து - பூ
வைக்கின்றேன் திரும்பவும் அம்மா வயிற்றில்
வந்து பிறப்பாய் என்ற நம்பிக்கையில்
இருவரின் கனவுகளையும் நிஜம் ஆக்குவாய்
என்று நயினை நாகபூசணி அம்பாளை
வேண்டி நிற்கின்றோம்

தம்புவத்தை
ஏழாலை மேற்கு,
ஏழாலை

அப்பா, அம்மா,
அக்கா, தங்கை
மற்றும் உறவினர்கள்.

(7854)

---

# இனப்பிரச்சினை தோற்றுவிக்கும் அரசாகவே சிறிலங்கா உள்ளது

**அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர்**

(சென்னை)

சிறிலங்கா அரசு இலங்கையில் இனப்பிரச்சினையை தோற்றுவிக்கும் ஒன்றாகவே உள்ளது என அண்ணாமலை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் பழனித்துரை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணாது இழுத்தடித்து வருகிறது. ஆட்சியில் உள்ள அரசு இனப்பிரச்சினையை தீர்க்கும் ஒன்றாக தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை மாறாக அது இனப்பிரச்சினையை உருவாக்கும் ஒன்றாகவே தன்னைக்காட்டி வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இஸ்ரேல் அரசின் போக்கு சமாதானத்திற்கு உதவாது

**பாலஸ்தீனிய அமைப்பு தெரிவிப்பு**

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய அரசின் இரகசியப் படை வீரர்களால் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பத்பிரிவைச் சேர்ந்த ஆறு பேர் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக மூன்று நாட்களுக்கு தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று பத் பிரிவு வற்புறுத்தியுள்ளது.

இப் பிரிவு விநியோகித்து வரும் துண்டுப் பிரசுரமொன்றில் இஸ்ரேலிய அரசு சமாதானத்தை விரும்பவில்லை என்றும், தொடர்ந்தும் இந்தப் போக்கை அனுமதித்துப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் முகமாக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பாலஸ்தீனியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 78 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# கூடங்குளம் திட்டம் பற்றி ரஷ்யாவுடன் மீண்டும் பேச்சு

**அணுசக்தி கமிசன் தலைவர்**

(புதுடில்லி)

கூடங்குளம் பகுதியில் அணு மின் நிலையம் அமைப்பது தொடர்பாக இந்தியா ரஷ்ய அரசுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அணுசக்தி கமிசனின் தலைவரான ஏ கே சட்டர்ஜி செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், 1000 மெகாவாட் திறன் கொண்ட இந்த அணு மின்சக்தி நிலையம் அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்தப்படும் என்றும், சோவியத் யூனியன் சிதறுண்ட கடந்த இரண்டரை ஆண்டுகளில் இத்திட்டம் பற்றி எந்தப் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை என்றும், தற்போது ரஷ்யா வர்த்தக ரீதியில் இத்திட்டத்தை செயற்படுத்த விரும்புகிறது என்றும் தெரிவித்தார். அத்துடன் தென் பகுதியில் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் கூட்டுத்துறையில் 500 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு அணு மின்சக்தி நிலையங்களை அமைக்க அணுசக்திக் கமிசன் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# வடகொரியாவுடன் பேச அமெரிக்கா தயார்

வடகொரியவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான கதவுகள் திறந்தே இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. புதிதாக மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அமெரிக்கா உறுதி அளித்துள்ள போதும் முன்னைய இரு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படல் வேண்டுமென்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. வடகொரியாவின் அணுசக்தி நிலையங்களைப் பரிசோதிப்பது தொடர்பானவை இந்த நிபந்தனைகள் என்பது தெரிந்ததே. கடந்தவாரத்தில் அமெரிக்காவிற்கும், வடகொரியாவிற்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட இருந்தது எனினும் வடகொரியாவிலுள்ள அணுமின் நிலையமொன்றை முழுமையில் பார்வையிடுவதற்கு சர்வதேச அணுசக்தி ஏஜென்சிக்கு வடகொரியா மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து அப்பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# விழுப்புரம் குண்டுவெடிப்பு இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(சென்னை)

விழுப்புரம் ராமசாமி படையாச்சி மாவட்டம் மந்தாரக்குப்பம் கிராமத்திற்கு அருகே மேற்பாதி என்ற கிராமத்தில் குண்டு வெடிப்பு ஒன்று ஏற்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இது பற்றி தமிழகப் பொலிசார் கூறுகையில், சைக்கிள் வண்டி ஒன்றில் ஆறு நாட்டுக் குண்டுகளை இந்த இளைஞர் எடுத்து வந்தார் எனவும், அவர் ... காவல் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களிலும் இவர் தொடர்புடையவர் எனவும் கூறப்படுகிறது. இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் கிராமத்துப் பெண் மணி ஒருவரும் காயமடைந்துள்ளார்.

# யுத்தநிறுத்தத்திற்கு தயார் ஆப்கான் அதிபர் அறிவிப்பு

---

## இனிதாய் மகிழ்ந்து வாழி!

எங்கள் தலைவர்
பேராசிரியர் அ. துரைராசா
மனமும் முகமும்
சொல்லும் செயலும்
மணியாய் இசைந்த மஹானுபவ
எங்கள் மனதுள்
நெருங்கிய தலைவா
இனிதாய் மகிழ்ந்து வாழி!

எங்கள் 'துரை'யின்
உயர்வான வழியினிலே
உயர் கல்விக் கழகம்
வளர்க்க வருகின்ற
புதிய துணை வேந்தரையும்
வரவேற்கின்றோம்.

ச. க. தனேந்திரன்
தலைவர்
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(கி-8962)

---

## "ஒன்று கூடல்"

பல்கலைக் கழகங்களில் கற்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரின் ஒன்று கூடல் நிகழ்வு 6-4-94 புதன்கிழமை பி.ப 4-00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் தற்பொழுது பல்கலைக் கழகங்களில் கற்கும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்

(சி-8959)

---

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 05

## நாடகமும் அரங்கியலும் கல்வியியற் கருத்தரங்கு

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
காலம்:- 02 04 1994 சனி 2-ம் நாள்
காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை
தலைவர்:- கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

கருத்தரங்கு

"தமிழ்நாட்டின் நாடக வரலாறு"

(அ) சுற்றாடல் அரங்கு - தெருக்கூத்து
திரு பா. அகிலன்
(ஆ) பாடல் அரங்கு - ஸ்பெஷல் நாடகம்
செல்வி ந. நவதர்சினி
(இ) சொல்லாடல் அரங்கு - பம்மல்
செல்வி மாலட்சுமி
(ஈ) தமிழகத்தில் அரசியல் அரங்கும்

## 6ம் மாத நினைவஞ்சலி



கடற்புலி கப்டன் செம்பிறை
(வல்லிபுரம் நளினி)

சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா

| தாயின் மடியில் | தமிழீழ மண்ணில் |
| --- | --- |
| 1973 - 04 - 15 | 1993 - 09 - 29 |

புலோப்பளை மண்ணிலே
பூகம்பம் வெடித்தது அன்று
தமிழ் அன்னை துயர் துடைக்க
களம் சென்றாள் செம்பிறை
காவிய நாயகியே உன் உடலை
புலோப்பளை மண் தனதாக்கிக் கொண்டதே
ஆனாலும் உன் இலட்சியம் வென்றது
உன் வரலாறு நாளை ...
இம்மண்ணில் பொறிக்கப்படும்

- போராளிகள்

(7889)

எடுத்து வந்தார் எனவும், அவர் நிலை தடுமாறி விழுந்தபோது நான்கு குண்டுகள் வெடித்தன எனவும், மேலும் குண்டுகள் வெடிக்கலாம் எனக் கருதிய பொது மக்கள் அவருக்கு அருகில் செல்லத் தயங்கியமையால் சுமார் இரண்டு மணிநேரமாக உயிருக்குப் போராடிய அவ் இளைஞர் உயிரிழந்ததாகவும் குறிப்பிட்டனர். மேலும் இவர் கும்பகோணம் தொலைக்காட்சி நிலையத்தின் மீது குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்தவர் எனவும் கூறப்படுகிறது. அத்துடன் புத்தூர், குளன்சாவடி

(காபூல்)

ஐக்கியநாடுகள் குழு அதன் பணியை நிறைவேற்ற உதவும் பொருட்டு யுத்தநிறுத்த மொன்றைப் பிரகடனப்படுத்த தான் தயாராக இருப்பதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ரபானி அறிவித்துள்ளார்.

ஆயினும் ஜனாதிபதியின் இவ் அறிவிப்பு தொடர்பாக பிரதமர் குல்புதின் ஹெக்மதியாரிடமிருந்தோ அல்லது அவரது ஆதரவாளர்களிடமிருந்தோ பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

### வலதுசாரிகளுக்கு அமோக வெற்றி

இத்தாலியின் பாராளுமன்றத் தேர்தலில் வலதுசாரி சுதந்திரக் கூட்டணி 366 இடங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது கம்யூனிஸ்ட் ஆதரவு இடதுசாரி முற்போக்கு முன்னணி 216 இடங்களை மட்டுமே பெற்றுள்ளது இத்தாலி பாராளுமன்றத்தின் 630 இடங்களுக்கும் கடந்த ஞயிறன்று தேர்தல் நடைபெற்றது தெரிந்ததே


உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சிக்காக
"ராசி சில்க்ஸ்"
ஸ்தாபனத்தின் ஆதரவில்

மின்னொளியில் மாபெரும்

உதைபந்தாட்டம்

இடம்: சரியோவான் கல்லூரி மைதானம்
காலம்: ஏப்ரல், 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 18 ஆகிய தினங்களில்
(பத்து நாட்களுக்கு)
தொடர் அனுமதிச் சீட்டுக் கட்டணம்: ரூ 5000/-, 1,000/-, 500/-, 250/-
தொடர் அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் இடம்:

ராசி சில்க்ஸ் 70, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

மைதான வாசல்களில் அனுமதிச் சீட்டுக் கட்டணம் ரூபா 25/-
அனைவரும் திரண்டு உதவி செய்வீர்!
உதைபந்தாட்டத்தை ரசிப்பதோடு நல்லதோர் பணிக்கு உதவுவோம்
(சி-8960)


செல்வி மாலட்சுமி
(ஈ) தமிழகத்தில் அரசியல் அரங்கும் நாடக சபாக்களும்
திரு கி. ஜெயசங்கர்
(உ) நவீனப் பின் அரங்கு
திரு. ப. இரகுபரன்
(ஊ) நிறைவுரை
தமிழர் பண்பாட்டில் நாடகம்
பேராசிரியர் கா. சிவத்தம்பி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மணிவிழாச் சபை
சன்மார்க்க சபை

(7879)

## முக்கிய அறிவித்தல்

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை 1994 ஆம் ஆண்டு தொடங்கும் தமிழ்ப் புத்தாண்டிலிருந்து (14-04-1994) மயான அபிவிருத்தி, பாதுகாப்பு, தகனக் கட்டணம் அறவிடுதல், மயான பாதுகாவலர் ஒழுங்கு, செய்யும் கடமைகள் போன்றவற்றை வலி-கிழக்கு பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கு அமைய பொறுப்பேற்றுள்ளதை செம்மணி இந்து மயானப் பாவனையாளர்களுக்கு பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.

ஆகவே மேற்குறிப்பிட்ட அபிவிருத்திச் சபையைத் தவிர இம்மயானத்திற்கான அபிவிருத்திச் செயற் திட்டங்களுக்காக எந்தத் தனிநபரோ, ஸ்தாபனங்களோ பணம் சேகரிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், 14-04-1994 ஆம் திகதி வியாழக்கிழமையிலிருந்து மயானத்திற்குள் பிரேதத் தகனத்திற்குக்கொண்டு செல்பவர்கள் இச்சபையின் செயற்குழு உறுப்பினர் ஒருவரிடமிருந்து உரிய தகன விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று நிரப்பி ஒப்பமிட்டபின் அந்த உறுப்பினர் ஒப்பத்துடன் வழங்கும் அனுமதித் துண்டைப் பெற்று மயான பாதுகாவலரிடம் காட்டினால்தான் தகனம்செய்ய அனுமதிக்கப்படுவர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

செயற்குழு உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய மயான அபிவிருத்தி சம்பந்தமான விளம்பர துண்டுப் பிரசுரப் பிரதிகள் வெளியிடப்படவுள்ளதையும், அறிவிக்க விரும்புவதுடன் இம்மயான பாவனையாளர் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் துண்டுப்பிரசுரம் கிடைக்கக்கூடிய வகையில் எமது செயற்குழு உறுப்பினர்கள் இயங்கவுள்ளார்கள் என்பதையும் அன்புடன் அறிவிக்க விரும்புகிறோம்

இராஜராஜேஸ்வரன் தங்கராசா
தலைவர்

நா. காசிவிஸ்வநாதன்
பொருளாளர்

வ. பரமசிவம்
செயலாளர்

(7891)

## சிந்தனைக்கு

கல்வியின்றி கற்பனை உள்ளவன் கால்கள் இன்றி இறக்கைகள் பெற்றவன்.

- ஜோசெஃப் ஜுபேர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2033
தபால் பெட்டி என் 05

# திரையுலக கற்பனையும் தமிழக அரசியலும்

அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், காப்பதற்குமாக ஆறில்லாத ஊருக்குக்கூட பாலம் போடக் கூடியவர்கள். இந்த வகையில் தமது இனத்தையும், சகோதரர்களையும் காட்டிக் கொடுக்கும் அரசியல்வாதிகளும் உள்ளனர். அதிலும் சில தமிழக அரசியல்வாதிகள் முன்னுதாரணமாகக் கூறக்கூடியவர்கள்.

சிறிது காலம் ஓய்ந்திருந்த புலிகள் எதிர்ப்பு பிரசாரத்தை மீண்டும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவினர் தொடங்கியுள்ளனர். ஆனால் ஜெயலலிதாவின் இவ் எதிர்ப்பு பிரசாரம் எவருக்கும் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடிய தொன்றல்ல ஏனெனில் ஜெயலலிதாவின் இந் நிலைப்பாடு புதியதொன்றல்ல என்பதோடு ஜெயலலிதாவின், நடவடிக்கைகள் இவ்வாறு காலத்திற்குககாலம் உத்வேகம் பெறுவது, தளர்வதும் வழமையானதே.

ஆனால் இம்முறை ஜெயலலிதாவும் அவரது தரப்பினரும் வெளியிடும் தகவல்கள் தான் அவர்களின் அரசியல் திரையுலகக் கற்பனையில் நடக்கின்றதா? அன்றி தமிழக மக்களின் அறியாமையில் நடக்கின்றதா என்ற கேள்வியை தெளிவாகவே கேட்க வைக்கின்றது. ஏனெனில் அவரது கற்பனை வளம், மர்மக்கதை வரிசையில் சேர்ந்துவிட்டது.

இந்த வகையில் அ.தி.மு.க தலைவி செல்வி ஜெயலலிதா தற்பொழுது வெளியிட்டுள்ள மர்மக்கதைதான் விடுதலைப் புலிகளுடன் இணைந்து தன்னைக் கொலை செய்வதற்கு இந்திய மத்திய அரசு சதிமுயற்சினை மேற்கொண்டுள்ளது என்பதாகும். ஜெயலலிதாவின் இவ் அறிவிப்பானது அண்மையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தொடங்கிய பிரசாரத்தின் உச்சநிலை வடிவமாகும்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை மத்திய அரசு மீண்டும் நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொடங்கிய ஜெயலலிதா, தற்பொழுது தனது இறுதி நிலையை அடைந்துள்ளார். இதற்கு அண்மையில் இந்தியப் பத்திரிகையொன்று வெளியிட்ட வேறொரு கற்பனையையும் ஆதாரமாக இணைத்துக் கொண்டுள்ளார். அதாவது லண்டன் சென்ற இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் பாதுகாப்பிற்கு இந்தியப் புலனாய்வுத்துறை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது என்பதே இதுவாகும்.

ஆனால் தமிழக அரசியல்வாதிகளில் தனியாக

# தற்போதைய தேர்தல் முறை விரைவில் மாற்றப்படும்

## - அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத்

(கொழும்பு)

''தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக தற்போது பின்பற்றப்படும் முறை விரைவில் மாற்றப்படும். பல்வேறு இன, மத, மக்கள் வாழும் எமது நாட்டுக்கு இன்றைய கால கட்டத்தில் பொருத்தமான வாக்களிப்பு முறை பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது. சுதந்திரம் பெற்ற காலம் முதல் இருந்து வந்த தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் மீண்டும் அறிமுகமாக்கப்படும் சாத்தியம் பெரும்பாலும் இருக்கிறது''. இவ்வாறு அமைச்சர் ஏ.சீ.எஸ் ஹமீத் அண்மையில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல்மற்றும் வாக்களிப்பு முறைகள் எதிர்பார்த்த பயனைப் பெரிதும் தரவில்லை. மாவட்ட அடிப்படையிலான தேர்தலிலும், விருப்பு வாக்கு அளிப்புமுறையிலும் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. மாவட்ட தேர்தல் முறையின் கீழ் சில தொகுதிகளுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போவதுடன் மேலும் சில தொகுதிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் தெரிவாகின்றனர். மேலும் நாட்டு மக்கள் மத்தியில் இன, மத,குல பேதங்கள் வளர்வதற்கே இன்றைய வாக்களிப்பு முறை வழி வகுத்துள்ளது.

இத்தேர்தல் முறை உருவாக்கப்பட்டபோது இந்தமுறையினால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி அப்போது நான் கூறிய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லைஎனவும் தெரிவித்தார்.

# உள்ளூரில் வீடியோப்படம் தயாரிக்க முயற்சி

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழக திரைப்படப்பிரிவு புதிய வீடியோப் படங்களைத் தயாரித்து மக்களுக்குக் காண்பிக்கவுள்ளது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக திரைப்படப் பிரிவு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது

இதுசம்பந்தமான கருத்துக்கள்பெறல் ஆலோசனைக்கூட்டமொன்று எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திரு பாஸ்கரன் அறிவித்துள்ளார். (25(

# மரியன்னை பேராலய பரிசுத்த வார வழிபாடு

(நல்லூர்)

யேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவுகூருமுகமாக இவ்வாரத்தில் யாழ் மரியன்னை பேராலயத்தில் திருவழிபாடுகள் நடைபெற உள்ளன.

இன்று வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்கு நற்கருணைவழிபாடு இடம் பெற உள்ளது.

ஏப்ரல் 1ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமைதினமாகும் காலை 6 30 மணிக்கு யாழ் பேராலயமுன்றலில் திருச்சிலுவையின் சிந்தனையும் மாலை 3· 30மணிக்கு திருச்சிலுவை ஆராதனை திருவிருந்து என்பன இடம்பெற உள்ளது.

ஏப்ரல் 02ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு பாஸ்காதிருவிழிப்புச் சடங்கு இடம்பெற உள்ளன.

ஏப்ரல் 3-ம் திகதி உயிர்த்த ஞாயிறுதினம் காலை 5 30 மணிக்கு திருப்பலி இடம் பெற உள்ளது.

காலை 6 30 மணிக்கு யாழ் ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை பங்குகொள்ளும் கூட்டுத்திருப்பலியும் பாப்பிறையின் ஆசீர்வாதமும் இடம் பெறவுள்ளது.

3-ம் 4-ம் திருப்பலிப் பூசைகள் காலை 8.0மணிக்கும் மாலை 5 30 மணிக்கும் இடம்பெற உள்ளதாக யாழ். மரியன்னைபேராலயப்பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் இராஜநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார். (17)

# பரீட்சை நடத்த முயல்வது பல்கலைக்கழக மரபுக்கு முரண்

## பேராதனை மாணவர் எதிர்ப்பு

(கொழும்பு)

ஒருமாத காலமாக பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. மாணவர்கள் பல்கலைக்கழக வளவிற்குள் பிரவேசிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது பரீட்சை நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன் குறிப்பிட்ட பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களை மட்டும் கடந்த 28ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்கு வரும்படி பேராதனை பல்கலைக்கழகம் அறிவித்தல் விட்டிருப்பது பல்கலைக்கழக நடைமுறைக்கு முரணாகும் என்று பேராதனைப்பல்கலைக்கழக மாணவசம்மேளனம்; பல்கலைக்கழகம் மூடப்பட்ட போது கைவிடப்பட்ட பரீட்சைகளை மீண்டும் நேற்று 30ஆம் திகதி நடத்த தீர்மானித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ஒரு மாத காலமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி பரீட்சைகளை இம்மாத இறுதியில் நடத்த பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சாதாரணமாக பரீட்சைகள் நடைபெறுவதற்கு முன் மூன்று வாரகால விடுமுறை மாணவருக்கு வழங்கப்படும். அத்தோடு மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தமாவதற்கு வசதியாக நூல்நிலையமும் திறந்திருக்கும் இந்த உரிமை பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு தடை வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் மீறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வழக்கு இல்லை எனினும் விடுதலைசெய்யப்படவில்லை

(கொழும்பு)

வழக்கு தொடுக்கப்படவில்லை என்று சட்டமா அதிபர் அறிவித்த பின்னரும் ஆறுபேர் பாதுகாப்பு அமைச்சினால் புனர் வாழ்வு முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்

தேர் திருப்பணி வேலைகளுக்காக கொழும்பு சென்ற இடத்தில் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட கனகசபை செல்வராசா, சிவகுமாரன் பாஸ்கரன், தியாகலிங்கம், பிரதீபன் கோபிநாதன் ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே' இவர்கள் தொடர்பாக ஆட் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சட்டமா அதிபர் இவர்கள் மீது குற்றச்சாட்டுகள் எதுவுமில்லை எனவும் வழக்கு தாக்கல் செய்யப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்' எனினும் பாதுகாப்பு அமைச்சு இவர்களை விடுதலை செய்யாமல் இரண்டு மாதம் முதல் நான்கு மாதம் வரையிலானகாலத்திற்குபுனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைத்துள்ளது. இது அவர்களின் அடிப்படை உரிமையை மீறுவதாகும் எனச் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இவ்வழக்கு மே 4-ம்திகதி

# 1993/94 பல்கலைக்கழக அனுமதி பாடசாலைகளில் தெரிவானோர்

அண்மையில் வெளியான வெட்டுப்புள்ளி அடிப்படையில் யாழ். மாவட்ட பாடசாலைகள் சிலவற்றில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு துறைரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை.

| பாடசாலைகள் | மருத்துவம் | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் | பொறியியல் I | பொறியியல் II | பௌதிக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ஆனால் தமிழக அரசியல்வாதிகளில் தனியாக ஜெயலலிதா மட்டும் தான் இவ்வாறான கற்பனை ஆற்றல் மிக்கவர் என்பது மட்டுமல்ல. தி.மு.க தலைவர் கருணாநிதி கூட இதற்குச் சளைத்தவர் அல்ல. அவரும் கடந்த ஆண்டில் தன்னைக் கொல்ல விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து அரசியல் ஆதாயம் தேட முற்பட்டவர்தான் இது இவர்களை உருவாக்கிய தமிழ் திரையுலகத்தின் தாக்கமாகவே இருக்கமுடியும்.

இந்திய அரசியல்வாதிகளைப் பொறுத்து இவ்வாறான கற்பனை வளம் கொண்டவர், ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி என்றே பொதுவான கருத்து இருந்து வந்ததுண்டு. ஆனால் இன்று தமிழக அரசியல்வாதிகள் சுப்பிரமணியம் சுவாமியை விஞ்சிவிடுவார்கள் போல உள்ளது.

ஆனால் இவர்கள் கூறுவது கதையானாலும் திரையுலக மாயையில் சிக்கிப் போயுள்ள மக்களைப் பொறுத்த வரையில் முக்கியமானதாகின்றது; இதனால் அது அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றது, அதாவது மயிலாப்பூரிலும், பெருந்துறையிலும் மேயில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ஜெயலலிதாவிற்கு இக் காட்டிக் கொடுப்பைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் கதைவிடும் ஜெயலலிதா சற்றாவது அரசியல் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தென்னாசியாவில் தேசிய இனங்களின் எழுச்சிக்கு ஒரு முன் மாதிரியான அமைப்பாக விடுதலைப் புலிகளைக் கருதும் மத்திய அரசு, அவர்களின் வளர்ச்சியானது, இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியது எனக் கருதுகின்றது, அரசியல் ராணுவரீதியில் பல முட்டுக்கட்டைகளையும்போட்டுவருகின்றது; இந்நிலையில் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட இந்தியா முயல்கின்றது என்பது எத்துணை மடத்தனமான கற்பனை;

மேலும் இந்திய மத்திய அரசிற்கு ஜெயலலிதாவைக் கொலை செய்ய வேண்டுமானால் அவர்கள் ஏன் அத்துணை சிரமமெடுக்க வேண்டும்? ஜெயலலிதாவின் பாதுகாப்பே அவர்கள் கையில் இருக்கும் போது மூன்றாவது சக்தி ஒன்றை ஏன் நாடவேண்டும்?

ஆனால் தமிழக அரசியற் தலைவர்களின் இவ்வாறான கற்பனைகள் அவர்களின் அரசியல் லாபம் தேடும் முயற்சியாக இருக்கலாம். ஆனால் தமது உரிமைக்காகப் போராடும் இலங்கைத்தமிழினத்தை வெகுவாகப் பாதிக்கக் கூடியதாகும்; தமிழக அரசியற் தலைவர்கள் இலங்கைத் தமிழருக்கு உதவாது விட்டாலும் உபத்திரவம் தராமல் இருந்தால் போதுமானது, அவ்வாறு இல்லாமல் அவர்கள் தொடர்ந்தும் இன்னல்களை விளைவிப்பார்களேயானால் தமிழ் இனத்திற்கு அவர்கள் விளைவித்த கெடுதலாகவே அவை எதிர்காலத்தில் கருதப்படும்.

கப்பட்டுள்ளமை தெரிந்ததே. இவர்கள் தொடர்பாக ஆட்கொணர்வு மனு தாக்கல் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இவ்வழக்கு மே 4-ம்திகதி ஒத்திவைக்கப்பட்டது.

## பல்கலைக்கழக மாணவர் அனுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

1993-94 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக தெரிவான மாணவர் தொகை கடந்த முறையைவிட கூடுதலானது என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுதெரிவித்துள்ளது

இதன்படி 1992-93 கல்வி ஆண்டைவிட 1993-94 ஆம் ஆண்டிற்குத்தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை 476 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ள இதேவேளை மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 1992-93 கல்வி ஆண்டைவிட 29 ஆல் குறைக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவித்துள்ளது அதாவது சென்ற வருடம் 817 பேர் தெரிவான போதும் இம்முறை 788பேரே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## எதிரணி ஆதரவாளர்மீது தொடர்ந்து தாக்குதல்

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தலை தொடர்ந்து மேலும் தமது ஆதரவாளர்கள் பொலிசாரின் தாக்குதலுக்குட்பட்டு வருவதாகவும் தமது கட்சியின் கடிதத்திற்கு பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் பொலிஸ் மாஅதிபரிடம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## கத்தியால் வெட்டியவருக்கு 4 வருட சிறைத்தண்டனை

(பருத்தித்துறை)

கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தியவழக்கில் எதிரிக்கு 4 வருட சிறைத் தண்டனை விதித்த பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் காயப்பட்டவருக்கு 75,000 ரூபா இழப்பீடு செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

பருத்தித்துறை தமிழீழ காவல் துறையினர் துன்னாலையைச் சேர்ந்த ஆ. பிரான்கிஸ் என்பவர் கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த ந ஜெகநாதன் என்பவருக்கு கத்தியால் வெட்டி படுகாயப் படுத்தியதாக குற்றஞ்சாட்டி பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர் இவ் வழக்கு விசாரணை தமிழீழ நீதியாளர் திரு ஒப்பிலான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோதேஎதிரிக்கு 4வருட சிறைத்தண்டனையும் இழப்பீடு 75,000 ரூபாவும் விதிக்கப்பட்டது (25)

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ். இந்துக் கல்லூரி | 09 | - | - | 02 | 02 | 25 | 06 | 21 | 05 | 04 | - | - |
| வேம்படி மகளிர் கல்லூரி | 05 | - | - | 02 | 05 | 01 | 04 | 05 | 04 | 03 | 01 | 11 |
| ஹாட்லிக் கல்லூரி | 05 | - | - | 02 | - | 11 | - | 19 | - | - | - | - |
| மத்திய கல்லூரி | 02 | 01 | - | - | - | 01 | - | - | 01 | - | - | - |
| சென். பற்றிக்ஸ் | 02 | - | - | 01 | 03 | 02 | 01 | 03 | 03 | 02 | 01 | 01 |
| யாழ். இந்துமகளிர் கல்லூரி | 02 | 01 | 02 | 03 | 03 | - | - | - | 01 | 09 | - | 06 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 01 | - | - | - | - | - | 02 | 02 | - | - | - | - |
| ஆங்கில திருக்குடும்ப கன்னியர் பாடசாலை | - | - | - | 02 | - | - | - | - | 01 | 02 | - | 01 |
| சுண்டுக்குளி | 04 | - | - | 01 | 01 | - | 01 | 03 | 01 | 02 | - | 06 |
| சென். ஜோன்ஸ் | 06 | 01 | 01 | - | 03 | 09 | 02 | 07 | 01 | 01 | 01 | - |
| யா/ வைகரத்திலம் மத்திய மகா வித்தியாலயம் | - | - | - | - | - | - | - | - | 04 | 01 | - | 01 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி | - | - | - | - | 01 | 05 | 04 | 07 | 03 | 07 | - | 01 |
| மானிப்பாய் மகளிர் கல்லூரி | - | - | - | - | - | - | - | - | 01 | 01 | - | 05 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 01 |
| இளவாலை புனித ஹென்றியரசர் | - | - | - | - | - | - | - | - | 01 | 04 | - | - |
| காரைநகர் யாழ்ரன் கல்லூரி | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - |
| வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | - | - | - | 01 | - | 01 | 01 | . | - | 03 | - | - |
| பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி | - | - | - | - | - | - | - | - | - | 03 | 01 | 01 |
| மகாஜனாக் கல்லூரி | - | - | - | 01 | 01 | 04 | - | 03 | 03 | 06 | - | 05 |
| யூனியன் கல்லூரி | - | - | - | - | - | - | - | 01 | 01 | 03 | - | 03 |
| இராமநாதன் கல்லூரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | 02 |
| நடேஸ்வராக் கல்லூரி | - | - | - | - | - | - | - | 01 | - | - | 01 | - |
| அருணோதயா | - | - | - | - | - | - | - | - | - | - | - | 03 |
| வசாவிளான் ம. ம. வித்தியாலயம் | - | - | - | - | - | - | - | - | - | 02 | - | 03 |

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி திரவியராஜா சரஸ்வதி

(மருத்துவத்தாதி Midwife)

செவிப்புலன் வலுவற்றோர் கைத்தொழிற் பேட்டை நிர்வாக முகாமையாளர் திரு. தி. சுதன் அவர்களின் அன்புக்கு இனிய தாயார் 27-3-1994 இல் மட்டக்களப்பில் தமது இல்லத்தில் இறைவனடி சேர்ந்ததை நினைந்து கைத்தொழிற் பேட்டையின் பொது முகாமையாளர் ஊழியர்கள் அனைவரும் ஆழ்ந்த கவலையுடன் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைக

பொதுமுகாமையாளர்
ஊழியர்கள்
செவிப்புலன்வலுவற்றோர்
கைத்தொழிற்பேட்டை.

153, மருத்துவமனைச் சாலை,
யாழ்ப்பாணம்,
(7896)

## காஷ்மீரில் ராணுவ ஆயுதக்கிடங்கில் பாரிய குண்டுவெடிப்பு சம்பவம்

### 5 உயர்அதிகாரிகள் உட்பட 13 பேர் பலி

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத் தலைநகர்சிறிநகரில் இராணுவத்தின் படைசாதன சேமிப்பு கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் இராணுவத்தைச் சேர்ந்த பலர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் மேஜர் ஜெனரல் தரத்திலான அதிகாரி ஒருவர், கேணல் தரத்திலான அதிகாரிகள் நான்கு பேர் உட்பட பதின்மூன்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இச் சம்பவம் ஒரு விபத்து என்று அதிகாரிகள் கூறியுள்ள போதும், இச் சம்பவத்திற்கு தாமே பொறுப்பாளிகள் என்று காஷ்மீரின் இருபோராளிக் குழுக்கள் உரிமை கோரியுள்ளன.

பாதுகாப்பு மிகுந்த இடத்தில் இக் குண்டு வெடிப்பு நேரிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் விபத்தாக நடந்ததாயினும் சரி, போராளிகளின் திட்டமிட்ட செயற்பாட்டின் விளைவாயினும் சரி எவ்வாறு இருந்த போதும் இந்திய இராணுவத்தின் தார்மீக மனோபலத்திற்கு பெருத்த அடி என்பது மட்டும் உண்மையானதுஎன பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

## விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்குதல் என்ற பேச்சிற்கே இடமில்லை

### எஸ்.பி.சவான்

(டில்லி)

விடுதலைப் புலிகள் உட்பட சட்டவிரோத நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடும் எந்த அமைப்பின் மீதும் உள்ள தடையை நீக்கும் கேள்விக்கே இடமில்லை என மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று இராஜ்ய சபாவில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் மத்திய அரசு உடன்பாடு ஒன்றை செய்து கொண்டுள்ளதாக வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியான அறிக்கை முற்றிலும் அடிப்படையற்றது விஷமத்தனமானது எனவும் சவான் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை எவ்வளவு காலம் நீடிக்கும் என அ. இ. மு. க. உறுப்பினர்கள் எழுப்பியகேள்விக்கு பதிலளித்த அமைச்சர்சவான் இவ் விடயம் நடுவர் மன்றத்திற்கு விடப்பட்டுள்ளதாகவும் நடுவர் மன்றமே இது குறித்து தீர்மானிக்கும் என்றார்.

### 1993 க.பொ.த உ.

8.30 முதல் மாலை 3 மணி வரை பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பூநகரியில்

பாக கடற்படையினர் தமது ராடர் கருவி மூலம் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை முன்கூட்டியே அவதானித்திருக்கலாம் ஆனால் கடற்படை அவ்வாறு செயற்படத் தவறிவிட்டது. விமானப்படையினர் கூட உடனடியாக தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனவே தோல்விக்கு முழுப்பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவே பொறுப்பேற்று அவர் பதவி விலக முன்வர வேண்டும் என்றும் ராவய குறிப்பிடுகிறது

இதே சமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவை பதவியிலிருந்து நீக்கி அவரை வெளிநாடு ஒன்றிற்கான தூதுவராக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி விலகிய முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக உயர் மட்டக்குழு ஒன்று தற்போது சிசிலுடன் பேச்சுகள் நடத்திவருகிறது,

தாம் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாகவே பதவி துறக்க முன்வந்ததாகவும், எனினும் தாம் தொடர்ந்து நாட்டுக்கு சேவை செய்ய தயாராக இருப்பதாகவும் சிசில் தம்முடன் பேச்சு நடத்திய உயர்மட்டக் குழுவிடம் கூறியதாக ராவய பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### சமாதான

கருத்து தெரிவித்தது.

கடந்த இரண்டு மாதங்களில் கிறிஸ்தவ தலைவர்களும் பிரமுகர்களும் யாழ்-சென்று புலிகளை சந்தித்தனர் எல்லோருமே புலிகள் சமாதானப் பேச்சு நடத்த விரும்புகின்றனர் என்ற செய்தியோடு திரும்பினர் ஆனால் ஜனாதிபதியோ உயிர் அழிவு, சேதங்களை ஏற்படுத்தும் வழியிலேயே கண்ணும்கருத்துமாக இருப்பது போல் தெரிகிறது என பி.பி.ஸி. மேலும் குறிப்பிட்டது

### முட்டாள்

மனம் நோகும்படி நடந்து கொள்ளல் போன்ற துர்ச்செயல்களில் ஈடுபடுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதலாம் திகதி கிறிஸ்தவர்களின் பெரிய வெள்ளி தினம் எனவும் இத்தினத்தில் மக்கள் தேவாலயங்களுக்கு செல்வர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேவையற்ற விதத்தில் சந்திகளில் கூடி நின்றும் கூட்டமாக வீதிகளில் சென்றும் வீதியால் செல்லும் மக்கள் மீது குறிப்பாக இளம்பெண்கள் மற்றும் மாணவியர் மீது விரும்பத்தகாத நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீதும் தமிழீழ காவல்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர். கடந்த 28ஆம் திகதி முதல் இந் நடவடிக்கையை தமிழீழ காவல்துறையினர் ஆரம்பித்துள்ளனர். மக்கள் தொடர்ச்சியாக செய்துவரும் முறைபாடுகள் அதிகரித்து வருவதை தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

### ஒத்திவைக்குமாறு

கேள்வி: இப்பயணம் கட்டாயம் நடக்குமா?

பதில்; நடந்தால்தான் சமாதானம் கிடைக்கும். விடுதலைப் புலிகள் என்னுடைய பயணத்தை நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொண்டுள்ளனர். இதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கேள்வி: முன்பும் ஒருமுறை உங்கள் பயணம் ரத்தானதே?

பதில்: இதற்கு அப்போது பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இதனால் நான் போகவில்லை. பேசி கருத்தறிவதே என் நோக்கம். இம்முறை புலிகள் நல்ல முறையில் என்னை வரவேற்க இருந்தனர். அங்கு போகாததை இட்டு எனக்கு மிகவும் கவலை.

கேள்வி; இப்பயணத்தை ஒத்திப்போட ஜனாதிபதி ஏதும் காரணம் தந்தாரா?

பதில்: இப்போது அங்கு ஹெலிகொப்டரில் போக நிலைமை சரியில்லை என்றார். இதை நான் ஏற்க மாட்டேன். ஏனெனில் விடுதலைப் புலிகள் நான் செல்லும் ஹெலிகப்டர் எங்கு இறங்க வேண்டும் என எல்லா ஒழுங்கையும் செய்திருந்தனர் நான் நேற்றுத்தான் லண்டனில் இருந்து வந்தேன். இன்று காலை இப்படியான செய்தி கிடைத்தது.

கேள்வி: இப்போருக்கு முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

பதில்: நூற்றுக்கு நூறு உள்ளது. மக்கள் அனைவரும் சமாதானத்தை விரும்புகின்றனர்.

கேள்வி: சிங்கள மக்களிடையேயும் சமாதானம் வேண்டும் என்ற ஆர்வம் உள்ளதா?

பதில். நூற்றுக்கு தொண்ணூறு வீதம் அவர்கள் சமாதானம் வேண்டும் என்கின்றனர். அரசியல்வாதிகள் மட்டுமே சமாதானத்தை விரும்பவில்லை. இதுவே உண்மை நிலைமை.

### விடுதலைப்புலிகள்

கள்'' ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், ''படையினருக்கு எரிச்சலையும் தலையிடியையும் கொடுக்கும் தொடர் அதிரடி'', ''தென் தமிழீழச் சிறை வாழ்வு'' ஆகிய செய்திக் கட்டுரைகளும், லெப். கேணல் நரேஸ் என்ற போராளியின் குருதிச் சுவடுகளும் ''இந்த மாதத்தில் இப்படி வெய்யிலடிப்பது ஏன்'' என்ற கவியுரையும், 'மண் போதும்' என்ற உருவகமும் இன்னும் சில அம்சங்களும் இவ் இதழில் இடம் பெற்றுள்ளன.

### தேர்தல்

த்தும் எரித்து சாம்பராயின பல இடங்களில் தாக்குதல், கல்லெறிதல் போன்ற சம்பவங்களும் இடம் பெற்றிருப்பதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி

காரனை சந்திக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்புகளை ஆராய்வதே இவ்விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் என்றார்.

இந்த யாழ். விஜயம் பின் போடப்பட்டதையிட்டு கவலையடைந்துள்ளதாகவும் தாம் எப்போது யாழ் விஜயத்தை மேற்கொள்வது என்பது குறித்து பொதுமக்களுக்கு பின்னர் அறிவிக்கவுள்ளதாகவும் சபாநாயகர் முகமப் சிறிலங்கா வானொலிக்குத் தெரிவித்தார்.

நீடித்து வரும் வன்செயல்களை நிறுத்த சகல முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும் என்பதில் தாம் அசையா நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை சபாநாயகரது இச் சமாதான முயற்சியை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முறியடித்துள்ளதாக பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

மேலும் இவரது பயணம் நடந்தேறியிருப்பின் கடந்த நான்கு ஆண்டுகளில் விடுதலைப் புலிகளை சந்தித்த முதலாவது அதி உயர் பிரதிநிதி என்ற நிலையை சபாநாயகர் அடைந்திருப்பார் எனவும் பி. பி. ஸி தெரிவித்தது.

## 3-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 1976 — 05 — 22



மறைவு: 1991 — 04 — 04

### செல்வி மாலினி இராசையா

திதி: 31-03-94

பிள்ளையாய் பெற்று விட்டோம்
பின்னுக்கு உதவி செய்வாய் என்று
பள்ளி செல்ல வைத்தோம் பட்டம்
பெற்று வீடு வருவாயென்று - ஆனால்

உன்னையோ படிக்கச் சென்ற போது ஜமன் கவர்ந்தன்றோ. மூன்றாண்டு சென்றாலும் உன்நினைவு மாறாது மாலினி உன் ஆத்ம சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் பரிதவிக்கும்
குடும்பத்தினர்

குடமியன்,
வரணி.
(இ-8971)

## பதவி வெற்றிடங்கள்

## மரண அறிவித்தல்



### நாகமுத்து சற்குணபாலா

மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தாளையடியைச் சேர்ந்த நாகமுத்து கனகம்மா தம்பதிகளின் அருந்தவச் செல்வன் சற்குணபாலா ஜேர்மனியில் அகால மரணமானார். இவர் தெய்வேந்திரம் (பாறிஸ்), சந்திரன் (பாறிஸ்), அருந்தவம், மகேந்திரன், ராசா, பாலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வம், குணவதி, சுகுணா, அருந்ததி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேந்திராதேவி, வெள்ளை (பிரான்ஸ்), வசந்தா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், சந்திரன், ராணி (பிரான்ஸ்), கண்ணன் ஆகியோரின் மைத்துனரும், தங்கச்சியம்மா, மாரிமுத்து, மல்லிகாதேவி, செல்லத்தம்பி, சுந்தையா ஆகியோரின் பெறாமகனும், குணரட்ணம் கனகம்மா, இராசேந்திரம், ஈஸ்வரி, பொன்னம்மா, சிவகாமி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 31-03-94 (இன்று) ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும். அவரது இல்லத்திலும் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாரியம்மன்வீதி,
தாளையடி,
திருநெல்வேலி.
(7897)

தகவல்:
செல்வம்
மைத்துனர்

## பதவி வெற்றிடங்கள்

**01 பக்கம் கட்டுநர்**

(தினசரிப் பத்திரிகைப் பக்கங்கள் கட்டுவதில் அனுபவமுள்ளவர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு)

**02 ஒப்புநோக்குநர்**

(ஒப்புநோக்குநர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**04-04 94 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்**

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

## சோழன் நெல் அரிசி வாணிபம்

இன்றிலிருந்து ( 31 - 3 - 94)

நாட்டரிசி கிலோ 27 ரூபா 47 சதப்படி (67 கிலோ) மூடை 1840 ரூபாவுக்கு மொத்தமாகவும்

நெல் (69 கிலோ) மூடை 1275 ரூபாவுக்கு மொத்தமாகவும்

மற்றும்

▣ உடையல் பச்சை ▣ திட்டல் பச்சை ▣ தவிடு என்பனவற்றை நிதானமான விலையில் பெற்றுக்கொள்ள

## சோழன் நெல் அரிசி வாணிபம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

கிளை: பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (7893)

## பொதுக்கூட்ட அறிவித்தல்

தீவக கடற்றொழிலாளர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 07-04-94 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு தீவக அரசியல்துறை திலீபன் மண்டபத்தில் நடைபெறும். ஆகவே அனைத்துச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மூவரையும் சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
தீவக கடற்றொழிலாளர்
சங்கங்களின் ஒன்றியம்

(ஜி-8972)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 29-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1472

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

26-4393, 27-0732, 41-8292, 28-1062, 26-5071, 26-3177, 26-5157, 24-9830, 43-4065, 28-1686, 28-8589, 40-7583, 24-9490, 26 6527, 26-9797.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

42-1722, 17-2020, 24-7267, 42-1464, 40-4484, 42-9625, 42-3945, 26-2786, 41-8686, 27-5077, 42-3495, 27-9797, 22-1168, 26-0512, 26-6062, 26-1658, 42-9220, 24-9758, 26-2764, 41-9327.

### 30-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1482

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

40-1516, 43-4045, 26-0547, 28-4225, 26-2979, 22-4862, 26-560, 28-2385, 24-5119, 27-6493, 41-9663, 28-6488.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-8374, 40-2394, 26-8223, 26-3605, 24-7992, 28-4550, 26 8052, 40-9085, 42-0482, 28-3233, 42-3815.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.